# வேர்கள்

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக காலாண்டு இதழ்

LONDON TAMIL CATHOLIC QUARTERLY **ROOTS**

கிறிஸ்துவில் வேரூன்றுங்கள்



LONDON TAMIL CATHOLIC CHAPLAINCY, 304, GARRATT LANE, EARLSFIELD, SW 18 4EH, U.K,
E-Mail: Verkalgb@gmail.com, Website: www.tamil-rcchaplaincy.org.uk Tel: 02088706257



வேர் - 3 | கிளை - 1 | 25.12.2017 | விலை : £1





புதியன படைப்போம்
தீயவை அழிப்போம்
மனிதம் காப்போம்
மாண்புடன் வாழ்வோம்

புதுமைகள் செய்வோம்
புரட்சிகள் செய்வோம்
புன்னகை பூத்த நல்
புதுவுலகு செய்வோம்

சிந்தனை செய்வோம்
செயலினில் செய்வோம்
சிந்தை தெளிந்து
சிறப்புடன் வாழ்வோம்




*What, then, will anyone gain by winning the whole world and forfeiting his life? Or what can anyone offer in exchange for his life?*
*Matthew 16:26*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# God has his own way to choose his disciples



Pope Francis has named Auxiliary Bishop Fidelis Lionel Emmanuel Fernando as the new bishop of the Diocese of Mannar, Sri Lanka.

Bishop Fernando will transfer from the Archdiocese of Colombo to replace Retired Bishop Joseph Kingsley Swampillai who was the Administrator of the diocese from January 2016. Bishop Fidelis Lionel Emmanuel Fernando was born on May 20, 1948 in Jaffna. After completing his ordinaries, Emmanuel entered St. Aloysius Minor Seminary. He was at the "Hawardan" at Haputale for a few months and then entered the National Seminary. In August 1969, he came to Rome for Theology. In 1974 he got the licentiate in Theology.

On January 6, 1973 he was ordained a priest by the Holy Father Pope Paul VI in Rome along with 38 priests from 19 countries on the solemn occasion of the 350th Anniversary of the congregation for evangelisation of people. In 1987, he proceeded to United States and earned a Doctorate in moral Theology from the Catholic University, Washington DC.

On February 11, 2012 he was ordained Auxiliary Bishop of Colombo, the office he held till date.

As of 2013 statistics, the Mannar diocese has 89 thousand Catholics, 34 parishes with 87 diocesan priests, 47 religious priests and 183 women religious.

## வாழ்த்தி வரவேற்கின்றோம்

மன்னார் மறைமாவட்டத்திற்கான புதிய ஆயராக பேரருட் கலாநிதி லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் 22ம் திகதி (22.11.2017. புதன்கிழமை) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். புதிய மன்னார் ஆயர் அவர்களை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் இங்கிலாந்து கரம் கூப்பி வாழ்த்தி வரவேற்று நிற்கிறது.

இறை இயேசுவின் மந்தையை பராமரிக்கும் பணியில் புதுத்தெம்புடன் பணியாற்ற தூய ஆவியார் எப்போதும் துணை நிற்பாராக. தங்களின் உடல் உள ஆன்மீக நலன்களுக்காக எங்களது செபங்களில் தாங்கி நிற்போம் என்று எமது இங்கிலாந்து வாழ் தமிழ் கத்தோலிக்க மக்கள் சார்பாகா இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

Dear Bishop of Mannar, On behalf of 'Verkal' we would like to say how delighted we are that you have been named Bishop of Mannar, and to offer you our prayers and support in your demanding new responsibility. - Tamil Chaplaincy, Britain

## புதிய பயணத்தை வரவேற்கின்றோம்




இறைவனின் பணியில் இனிய பயணத்தை ஆரம்பித்து. நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களை தேர்ந்து கொண்டேன் (யோவா:15:14). என்ற இறைவார்த்தைக் கேற்ப எமது புதிய ஆன்மீக அருட்தந்தை எல்மோ யோசேப் அவர்களை வரவேற்கின்றோம். "தாயின் வயிற்றில் கருத்தரிக்கும் முன்னமே நான் உன்னை தெரிவு செய்தேன்" அருட்தந்தை அவர்கள் தனது குருத்துவ பணி வாழ்வில் பல ஆலயங்களில் பங்குத்தந்தையாக பணியாற்றி தற்போது லண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகத் தந்தையாக எமது யாழ். ஆயரினால் தெரிவுசெய்யப்பட்டு பிரித்தானியா வருகின்றார்.

அருட்தந்தை அவர்களே. வானம் தீண்டும் தூரம் ஆன்மிகத்திலும். பொது பணிகளிலும் ஈடுபட வேண்டும்! உங்கள் பணி பல ஆண்டுகள் சிறக்க வேண்டும் என வாழ்த்தி நிற்பதோடு உங்கள் பணி வாழ்வில் இறைவன்தாமே முன்னும். பின்னும். வலமும். இடமுமாக இருந்து வழிநடத்த வேண்டும் எனவும். உடல். உள ஆன்மிக பலத்தோடு பணிகளை முன்னெடுக்கவும் இறைவனிடம் மன்றாடி வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின் றோம்.

- லண்டன் தமிழ் ஆன்மிக பணியக மக்கள்

### ஐரோப்பிய ஆன்மீகத் தந்தையர்களின் ஒன்றுகூடல்





*May this magical time of Christmas and New Year fill your life with lots of goodness and peace of mind - Editor*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் 2017 தீபாவளி பெருவிழாச் செய்தி



ஒளியின் பெருவிழாவான தீபாவளி திருநாளைக் கொண்டாடும் இந்து சமய சகோதரர்கள் அனைவர்க்கும் அன்பான தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

குடும்ப உறவுகளிலும் நட்பு வட்டங்களிலும் நடைபெறும் கொண்டாட்டங்கள் எப்போதும் மகிழ்வானவை. அன்பையும் உறவையும் வளர்ப்பவை. இந்த வகையில் இப்பெருவிழா உங்கள் குடும்ப மற்றும் நட்பு உறவுகளைப் புனிதப்படுத்தி புதியதாக்கி அன்பையும் புரிந்துணர்வையும் எதிர்கால நம்பிக்கையையும் தரும் ஒரு விழாவாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறோம்.

இருளைப் பழிப்பதை விட ஒளியை எற்றுவதே சிறந்தது என்று கூறப்படுவதை நாம் அறிவோம். ஒளியை எல்லோரும் விரும்புகிறார்கள். இருளைப் பார்த்து எல்லோரும் பயப்பிடுகிறார்கள். இருளுக்கும் ஒளிக்குமான போராட்டத்தில் ஒளியே வெல்ல வேண்டும். நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில் நன்மையே வெல்ல வேண்டும்.

இருள் நிறைந்த துன்பமான வேதனை மிக்க வாழ்வை விடுத்து ஒளிமிகுந்த மகிழ்ச்சியான வாழ்வையே எல்லோரிற்கும் நாம் ஆசிக்க வேண்டும். இதையே நற்செய்தி ஏடுகள் பின்வருமாறு தெரிவிக்கின்றன.

**"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்... எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை மாறாக விளக்குத்தண்டின் மீதே வைப்பர். அப்போதுதான் அது வீட்டில் உள்ள அனைவர்க்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க. அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக்கண்டு உங்கள் விண்ணக தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்". (மத்தேயு 5:14 - 16)**

இந்த ஒளியின் விழாவில் நாம் ஒளியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவே அழைக்கப்படுகிறோம். வாழ்வில் நம்பிக்கை இன்றி விரக்தியில் இருப்போர் - எல்லாராலும் கைவிடப்பட்டு வீடுகளிலும் வயோதிப இல்லங்களிலும் தனிமையில் வாடுவோர் - வைத்திய சாலைகளிலும் வீடுகளிலும் வருத்தத்தில் இருப்போர் - சிறையிலும் தடுப்பு முகாம்களிலும் அல்லற்படுவோர் - அடுத்த நேர உணவு என்ன - யார் எமக்குத் துணை என ஏங்குவோர் - தாம் புரியப்படவில்லை தம் எண்ணங்கள் ஏற்கப்படவில்லை என ஏங்குவோர் இவர்களே இன்று இருளில் இருப்பவர்கள். இவர்களுடைய வாழ்வில் ஒரு தரிசிப்பால் - ஒரு அன்பான வார்த்தையால் - அமைதியான செவிமடுத்தலால் - ஒரு நம்பிக்கையூட்டும் செயலால் - ஒரு சிறிய அன்பளிப்பால் - ஒரு நேர உணவால் ஒளியைக்காட்ட முடியுமாயின் அதுவே நாம் கொண்டாடும் சிறந்த தீபாவளிப்பெருவிழாவாகும். உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க என்ற வார்த்தைகளை நம்முடையதாக்குவோம்.

+ Gnanapragasam

மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை,
யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்.

## Please Help more...

As we celebrate our Christmas festivity, let us not forget long struggle of our people in Sri Lanka who lost their identity in our own land of birth. We may have left the country and started a new life but let us not forget our people. Our mother land will always be our mother land and no one can take this away. Whoever wants to take this away are the weakest people. So dear friends, let us rebuild our lives wherever we are and begin a new root wherever it seed and multiply our heath and wealth again as united Tamil community. Remember our roots which where we came from.

We must not let ourselves down as a community and work towards achieving more things in life. I would like to see the new roots (youth) rise up to the challenge and embrace the modern world, in Technology and all other aspects of life. Help our community back home. As our Bishop of Jaffna, Rt. Rev.Fr. Justin Gnanapragasam said in his speech to the Catholic Association that "we must go and see our roots (people) back in our homeland and help those who need".


Many people already help our old schools and families and friends but more needs to be done if our people need to survive in Sri Lanka. We have enough resources in this country to offer. So let us ask our youth to pool the resource, come forward and help more through our Chaplaincy.

May I take this opportunity to wish you all a Happy Christmas and a very prosperous new year 2018.

*- Charles Louis -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் திருப்பலியில் வழிபாடுகளைத் தமிழில் செய்ய வேண்டுமா?



“மொழியும் சமயமும் சமூகத்தின் இரு கண்கள்”, “தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்குவோம். எமது தாயகம் இலங்கை அதிலும் வடகிழக்குத் தான் எமது தாயக வாழிடமாகும். என்ன தான் பிரித்தானிய மண்ணில் பிறந்தாலும், எமது பெற்றோர், உற்றார், உறவினர் பிறந்த நாடே எமதானதாக மாறியது உண்மையே. அந்த வகையில் அந்த தமிழ், கலாச்சாரச் சமயப் பின்னணியில் நாமும் பழக்கப்பட்டு விட்டோம். மேற்கூறப்பட்ட விழுமியங்கள் கடத்தப்பட சமயம் ஒரு ஊடகமாக விளங்க வேண்டும். அந்த அடிப்படையில் தமிழை வாழவைப்பதும், அதனைக் கடைப்பிடித்துக் காப்பாற்றுவது எமது கடமையும், பொறுப்புமாகும். சிலர் தமிழ்ப் பாடல்களைக் கூடவே ஆங்கிலத்தில் எழுதிப் படிக்கிறார்கள். எமது ஆலையங்களிலும் இது நடைபெறுகிறது. உண்மையில் இது அர்த்தமற்ற, பயனற்ற செயல்முறையாகவே எமது சந்ததிக்குக் கடத்தப்படுகிறது.

உதாரணமாக அன்பான என்பதை Anpana என்று, இன்று எழுத தமிழ் தெரிந்தவர்கள் இன்று இருக்கிறார்கள். ஆனால் அதனை எழுத எதிர்காலத்தில் எவருமே இருக்கச் சாத்தியமில்லை. மற்றும் ஒரு மொழி வாழ, அந்த மொழியில் சிலராவது முழுமையாகப் பயிற்றப்பட்டால், அதுதான் ஒரு மொழியை வாழ வைக்கும். எமது மொழியை வழிபாடுகளுடாகக் கடத்தத் தாயகத் திருச்சபை உயிர்ப்புடன் இருக்கிறது. ஆகவே நாம் தமிழில் வழிபட வழிசமைக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எமது யாழ்.ஆயர் ஆசியையும், பங்களிப்பையும் ஆற்றிக் கொண்டேயிருக்கிறார்.

நாம் தமிழில் வழிபட, வழிபாடுகளை இயன்ற வரையில் செய்தால் வழிபாட்டுடன் தமிழும் இணைந்து பயணிக்கும். இன்றுள்ள பெற்றோரும், கற்றோரும், மொழியை மொழிக்கே உரிய விழுமியங்களுடன் எமக்குத் தரப்படல் வேண்டும். சிலரையாவது நேர்த்தியாகத் திருப்பலி ஊடாகத் தமிழைப் பயிற்றுவிக்க வேண்டும். மேற்கண்டவாறு நடைமுறைப் படுத்தினால், யாரும், எப்போதும், எதற்காகவும் தமிழ்மொழி அழிந்துவிடும் என்று அச்சமடையத் தேவையே இல்லை. தமிழும் வாழும், தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகமும் இலண்டனில் இறுமாப்புடன், இளையோரால் தொடர்ந்து நடைபயிலும் என்பதற்கு நம்மைப்போன்ற இளையோரே சான்று பகர்கிறோம்.

“இளைஞர்களே கனவு காணுங்கள்” என்ற விஞ்ஞானி அப்துல் கலாமின் கனவை இலண்டனிலும், புலம்பெயர் நாடுகளிலும் பொறிப்போம். தமிழ் சமயத்தையும், சமயம் தமிழையும் வளர்க்க வேரோடு விழுதாகுவோம்.

**– மனற் அருளானந்தம், Youth**

# வேர்களின்றி விழுதுகளில்லை

தமிழ் ஆன்மீகப் பயணத்தின் ஆக்கத்தில் உதித்த ‘வேர்கள்’ எனும் சஞ்சிகைக்கு என் பங்களிப்பைச் செய்வதில் மகிழ்வடைகிறேன். காலத்தின் தேவைக்கேற்பவும், தாயகத்தின் சிறப்பு விருந்தினர்களையும் வரவேற்கவும், அவர்கள் வாழ்வு, பணி என்பவற்றை அறிமுகம் செய்து மகிழவும் வேர்கள் எடுத்த முயற்சி வரவேற்கத்தக்கது. இச் சஞ்சிகை ஆசிரியர் மற்றும் குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும் எனது செபங்களும், பாராட்டுகளும் உரித்தாகுக. அத்துடன் மக்களின் சிறந்த சிந்தனைகளை உள்வாங்கி, தொடர்ந்து சஞ்சிகை வெளிவரும் என்பது எனது திண்ணமான நம்பிக்கை.

வேர்தான் மரத்தின் அடிநாதம் அவ் வேர்களாகிய நாம் எமது தாயகத்தில் வேரூன்றப்பட்டவர்கள். ஆனால் இன்று பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளால், புலம் பெயர் நாடுகளில் வேர் பதித்த தளங்களாக மாற வேண்டியுள்ளது. திருமுழுக்கு அருளப்பரின் கருத்துப்படி, ஏற்கனவே வேரில் கோடரி வைக்கப்பட்டு விட்டது. என்பதே இன்றைய நிலைக்குப் பொருத்தமானதாகும்.

எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, அதிலும் சிறப்பாக அவரவர் ஆன்மீகம் அனைத்தையும் தாங்கியதாகவே எமது வேர்ஊன்றப் பட்டது. இவைகளின் தனித்துவம் பேணப்படவும், தலைக்குப் தொடர்ந்து விழுதுவிடப், பக்கபடாமல், தொடர்ந்து பயணிக்கவும் வேண்டியது தவிர்க்க முடியாதது. புலம்பெயர் சூழ்நிலையில், பெற்றோர், பெரியோர், உறவினர் என இங்கு பிறந்த பிள்ளைகள், உறவுகளைப் பொருட்டாக, எண்ண மறக்கின்றனர்.

குடும்பச் செபமாலை சொல்லுதல், ஒன்றாகக் கலந்துரையாடல், ஒன்றாக உணவருந்தல், ஆலோசனை கேட்டல் இவைகள் இன்று கேள்விக்குறியாகியுள்ளதை நோக்கும் போது, எமது வேரையே அசைப்பதைப் போல உணரத் தோன்றுகிறது இவற்றைத் தொலைத்து விடாது.

வேர்களாகப் பயணிக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் இவற்றை இன்றைய சந்ததியினர் கடைப்பிடிக்காமல் விடுவதென்பது, வேரிலிருந்து விழுது விலகுவதைப் போன்றது. நாம் அடைந்த அனைத்து இன்னல்களையும், ஆண்டவன் பாதத்தில் வைத்து, அவை எம் வேரை அசைக்காமல், அவ்வின்னல்கள் எம்மை மேலும் பலப்படுத்த ஒன்றுபட்டு உழைப்போம். எம் சந்ததியினர், திருச்சபையின் தலைமையில் வேருக்கு உரமாகி, மரமாகி விழுது விடட்டும். அங்கு உண்மை, நீதி. அன்பு என்ற கனிகள் தரட்டும்.

**- அருட்சகோதரி சோவியா. தி.கு.க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Prevention is Better than cure

When children get older, they'll become responsible enough to go to school on their own and you'll want to be able to keep in touch with them and know they are safe by giving them a phone. On the other hand, phones can lead to harmful effects on your kids. Also as your children's friends get phones, inevitably they may also want one too. Once they do get a phone they start to want more gadgets like tablets and laptops. In this article, I'll create awareness of the harmful effects on technology as well as discuss ways you can prevent and manage them.

Let's start by talking about physical health - now, are we glued to our screens? Research shows staring down at your screens constantly is ruining your back. According to a study of young adults in the UK 84% of those experienced back pain the result also can lead to head pain, neck pain, arm pain or even numbness. Too much screen usage could strain your child's eyes; the amount of children needing glasses is increasing each year. Sleep deprivation is the most detrimental to children as kids need more sleep to grow and develop. Phones, tablets, laptops and computers emit blue light, which is very harmful to your eyes; at night when you're supposed to be asleep your brain thinks its daylight keeping you wide awake. This may affect their work at school.

What about mental health? Addiction is the fact or condition of depending and craving to a particular substance or activity. In this case technology, your child will start to depend more on technology, as they get more access to gadgets there is a fear they won't be able to live without it. There may even be a lack of social bonding, you may find your child not talking to you as much but going straight onto their gadgets; this is bound to have an effect on their communication skills. There is also a chance your child may feel anxious or insecure, when accessing social media via technology. And of course there is a risk of cyber bullying, which may really demotivate your child affecting their day to day lives.

What do we do about this? In my opinion prevention is better than cure. If you do give your child a phone or any other technological devices be prepared to deal with the consequences. As parents you have the right to limit your child's usage on devices maybe consider setting rules, such as no phones after eight or no gadgets at the table, it's in your child's interest to be strict about it. The positives by being strict will force your child to find other interests such as reading or a playing a sport.

It's not all doom and gloom, technology is very useful it can help you and your child everyday life, but overuse can damage your child's health. Today in this time and age technology is now so integrated with our lives it's come to a point people can't live without it and you, as parents need to stop your child from getting to this. Hopefully you are now aware of technology's negative effects and you know how to prevent and handle them •

**- Anila. N**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TCA (UK) 30 வது ஆண்டு வருடாந்த இராப்போசன ஒன்றுகூடல்

இலண்டன் கத்தோலிக்க ஒன்றியத்தின் 2017இற்கான ஒன்று கூடலும் நடன நிகழ்வு ஐப்பசி மாதம் பதின் நான்காம் நாள் சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதீதியாக வருகைதந்து அருமையான ஆனால் ஆணித்தரமான பல கருத்துகளை வழங்கினார் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள், அத்துடன் மக்களை விளிப்படைய வைக்கும் படியான அன்பான வேண்டுகோளையும் விடுத்திருந்தார்.







இலண்டன் கத்தோலிக்க ஒன்றியத்தின் (TCA) அளப்பரிய சேவையை வாழ்த்தி மகிழ்கிறோம்.

"உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்று வேதாகமம் இரத்தினச் சுருக்கமாகக் கூறி நிற்கிறது. "யாரும் ஊரே யாவரும் கேளீர்" என்ற கணியன் பூங்குன்றனாரும் (புறநானூறு பாடல்-192) கூறி நிற்கிறார் அதாவது நாம் எல்லோரும் உறவினர்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் நேசிக்க வேண்டும் எனும் இக் கருத்துகளுக்கேற்ப தமிழ் கத்தோலிக்கப் ஒன்றியமானது இற்றைக்கு முப்பது ஆண்டுகளாகப் பல பாரிய பணிகளைப் புரிந்துவருகிறது. பெற்றோரை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த மனைவிமார், ஊனமுற்றோர், அங்கவீனர், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், வறுமையில் வாடும் உறவுகள் அத்துடன் கல்வித்தரத்தை மேம்படுத்த என இன்னோரன்ன, அளப்பரிய. பணிகளை இலண்டன் கத்தோலிக்க ஒன்றியம் ஆற்றிவருகிறது.

என்னை இறைவன் நன்றாகப் படைத்துள்ளார் அத்துடன் சில திறமைகளையும் தந்து, என்னையும் இங்குள்ள அனைவரையும் காத்து வருகிறார். இங்கேயே நான் நின்று விடுகிறேன். நானும், எனது வீடும், எனது பிள்ளைகள், சிறிது மேலே சென்று எனது உறவுகள் என்று ஒரு வட்டத்தைப் போட்டு வாழுகின்றேன். நான் நன்றாக விலை உயர்ந்த ஆடைகளையும், புதுப் புது, விலை உயர்ந்த ஆபரணங்களையும், அணிகலன்களையும், அணிந்து மகிழ்கிறேன். மூன்று வீடுகள், இப்படியே அடுக்கிக் கொண்டே என் வாழ்வு நகர்கிறது.

எம் தாயகத்தில் மாற்றிப் போட ஆடை இல்லை. காலுக்குச் செருப்பு இல்லை. மழை என்றால் வீட்டுக்குள் வெள்ளம், குடிக்கக் கஞ்சி கூடவே இல்லை கண்டி கொழும்பு வீதி அழகாகத்தான் காட்சியளிக்கிறது. ஆனால் கிராமங்களின் பாதைகளோ, சேறும் சகதியுமாக வாகனமே செல்ல முடியாத, ஆனால் வீதி என்று பெயர் காணப்படுகிறது. அவை வீதிகள் அல்ல, விதி வரைந்த கோடுகள் என்பதுதான் பொருத்தமானதாகும். மேற்குறிப்பிட்ட மக்களுக்காகவே தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் உழைக்கிறது நீங்களும் நாங்களும் கை கோர்த்து வட்டத்தைப் பெரிதாக்குவோம். பெரிய மனதுடன் சிறிய சேவையையாவது செய்ய முன் வருவோம்.

**"காலத்தினாற் செய்த உதவி ஞாலத்தில் மாணப்பெரிது."**

கொடிய போரினாலும். இயற்கை அனர்த்தத்தனாலும், வாழ வழியின்றி, தற்கொலை கூடவே செய்கிறார்களே! உளவியல் தாக்கத்துக்கு உட்பட்டுத் தடுமாறுகிறார்களே! இவ்விதமான உறவுகளுக்காகத் தான் இந்த நிறுவனம் உழைக்கிறது. இற்றைக்கு முப்பது ஆண்டுகளாக சேவை செய்கிறார்கள். ஒரு சிலர் குடும்பமாக ஆரம்பத்திலிருந்து இன்றுவரை, பலத்த சிரமத்தின் மத்தியில் பணியாற்றி வருகிறார்கள். அந்த உறவுகளுக்காக, இந்த அர்ப்பணிப்புள்ளவர்களுடன் இணைவோம். இந்த நிறுவனத்தின் வளர்ச்சியைப் போற்றி, வாழ்த்துகிறோம். அநேகமான நிறுவனங்கள் இருபது வீதத்தை பயண, மற்றும் அச்சுத்தாள்களுக்காகச் செலவிடுகிறார்கள் இவர்களோ நூறு வீதமான பணத்தையும், மக்களுக்காகவே பயன்படுத்துகிறார்கள். இவர்களுடன் இணைந்து கைகோர்த்து, இல்லாமையால் வாடும் உறவுகளுக்காக உழைப்போம் என உள்ளத்தில் உறுதி பூணுவோம். உங்கள் சேவை அவர்கள் தேவை, தொடர்க உங்கள் பணி வாழ்க உங்கள் சேவை ●

**- லண்டன் தமிழ் கத்தோலிக்க மக்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணமாக்கல் வழிப்பாட்டிலிருந்து ஓர் அனுபவப்பகிர்வு

இலங்கையிலிருந்து வருகை தந்த அருட்தந்தை லோரன்ஸ் (Rev. Fr. Lawrance) அடிகளாரால் நடாத்தப்பட்ட குணமாக்குதல் வழிப்பாட்டிலிருந்து ஒரு சில செய்திகள் என் நெஞ்சைத் தொட்டது. ஆண்டவர்பால் இன்னுமதிகமாக என்னை ஈர்த்தது. ஆண்டவர் என் பக்கம் சாய்ந்து என் மன்றாட்டைக் கேட்டருளினார். கற்பாறையின் மேல் நான் காலூன்றி நிற்கச் செய்தார் (சங்கீதம் 40:1-2). ஆம் ஆண்டவர் இயேசு சிலுவையில் தலை சாய்த்து மரணித்து என்னை காத்து, பாவத்திலிருந்து விடுதலை தந்து, என்னை கண்மலையாக உயர்த்தினார் என்னும் அவரின் அன்பின் தியாகத்தை நினைவுபடுத்தியது.

நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன் ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வேன். (ஏசாயா 54:7) துன்பங்கள், தூரங்கள், கஷ்டங்கள், மரணம் வரும் வேளையில், ஆண்டவர் என்னைக் கைவிட்டு விட்டார் என்று ஆண்டவரை மறந்து செல்லும் வேளைகள் பல என் வாழ்வில். ஆனால் என்னை நேசிக்கும் ஆண்டவர் எப்போதும் என்னைக் கைவிடுவதில்லை என்பதை நினைவுபடுத்தினார்.



"ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவுங்கள்" (யோவான் 13:1-7 & 14) எனவே எனது குடும்பத்தில், சமூகத்தில் எல்லாரையும் பாகுபாடின்றி நேசிக்கவும், பணிசெய்யவும், எனக்கு விடுக்கப்பட்ட கிறிஸ்தவ அழைப்பை நினைவூட்டி நின்றது. என் பழைய வாழ்வைக் களைந்து புதுவாழ்வு பெற, குணம் பெற அழைக்கப்பட்டேன்.

"வாருங்கள், ஆண்டவரிடம் நாம் திரும்புவோம் நம்மைக் காயப்படுத்தியவர் அவரே. அவரே நம்மைக் குணமாக்குவார் நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே.

அவரே நம் காயங்களைக் கட்டுவார். உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகின்றேன்" (ஓசேயா 6:1-3 & 6) என்கின்றார் ஆண்டவர். எனவே ஆண்டவர் கரம் பிடித்து நடக்க அழைக்கும் குரலுக்கு செவிமடுப்போம். அவர் வழி செல்வோம்.

ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள் அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறுபெற்றோர். (சங்கீதம் 34:8) ஆம் ஆண்டவரை சுவைக்கக் கிடைத்த வாய்ப்புக்காக, அனுபவத்திற்காக ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள் அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறுபெற்றோர். (சங்கீதம் 34:8) ஆம் ஆண்டவரை சுவைக்கக் கிடைத்த வாய்ப்புக்காக, அனுபவத்திற்காக இறைவனுக்கும், அருட்பணியாளர்களுக்கும் நன்றி கூறி நிற்கின்றேன்.

*- மரிறோஸ் (றோசா)*

# Youth discovery challenge - Wallington Mass Centre

An enthusiastic group of youngsters in Wallington area organised a youth discovery challenge during the half term in October 2017. The program was initiated by the Tamil Chaplaincy Youth Secretary & the Wallington Coordinator.

The Challenge was a discovery trail of Kingston Town Centre and obtain photographs and recording of iconic places within an hour. Kingston is one of the oldest towns in the UK. It has a long Royal history. The town houses the old market, the university, Kingston College, Museum, Shopping centre, Library, Cinemas, places to eat and the amazing view of Thames River and the stunning scenery along its banks.

The youth responded with great enthusiasm eagerly awaiting the challenge. Some were prepared well in advance having studied maps and literature available on Kingston. This was a convincing demonstration of the use of the facilities now extensively available to gather information vital to the success of any venture. It also brought out the ability to collaborate and demonstrate and appreciate the value of team effort. It gave them a great insight into history and to appreciate the nature and the wonderful scenes that are there to be enjoyed. The chaplaincy and the organisers thank all those who participated. We warmly congratulate the winner Anya Haridas.

**-Youth Secretary**
**Charles Louis -**

# மறைக்கல்வியின் முக்கியத்துவம்

வேதாகமத்தையும் அதன் முக்கியத்துவத்தையும், அதன் கோட்பாடுகளையும் அது எவ்வாறு வாழ்க்கையில் வாழ, வழிவகுக்கிறது என்பதையும் மறைக்கல்வி விளக்கி நிற்கிறது. இன்றைய நவீனத்துவ வாழ்வின் ஓட்டத்திலும் இரு வேறு கலாச்சாரப், பண்பாட்டுக் கலப்பிலும் எம்போன்ற இளையோர் சிக்கியுள்ளோம். இதற்கு ஒரேவழி நாம் இறை நம்பிக்கையையும், விசுவாசத்தையும் ஆழமாகக் கற்க வேண்டும். இவ் அரிய சந்தர்ப்பமாக மறைக்கல்வி கற்றல் அமைகிறது. இது எம்மை உண்மை, நீதி, அன்பு எனும் உயரிய விழுமியங்களை வாழ்வில் செயல்படுத்த வழிகாட்டுகிறது. மேலும் இது இறைநம்பிக்கையை ஆழப்படுத்தி, இறை ஆட்சியின் மக்களாக வாழ, எம்மைத் தூயவர்களாக்குகிறது. எதிர்காலத்தில் தமிழ் மொழியில் மறைக்கல்வியைக் கற்பிக்கவும் எமது வொளிங்ரன் பங்கின் மறையாசிரியர் எம்மைப் பயிற்றுவித்துள்ளார். - **MISS. ALEXIA RAMESH**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்றைய சூழ்நிலையில் இந் நிகழ்ச்சியை ஒரு பொழுது போக்காகப் எண்ணிப் பலர் பார்வையிடுகின்றனர் இங்கு பலவிதமாகப் பலர் பாதிப்புக் குள்ளாகுகின்றார்கள் என்பது தான் நிதர்சனமான உண்மை. இதனைப் பலர் உணர மறுக்கிறார்கள் இங்கு உண்மைக்குப் புறம்பான, வாழ்வில் நடைபெறாத, பல மிகுதிப்படுத்தப்பட்ட கருத்துகள் மக்கள் மத்தியில் விதைக்கப்படுகிறது என்பது கசப்பான உண்மை. இது உடலளவில் மனித வாழ்வில் மனிதர் இவ் உண்மைக்குப் புறம்பான விடயங்களைத் தமது குடும்ப உறவுகளுக்கிடையில் பிரயோகிக்க முந்படுகின்றனர் என்பது ஒரு புறமிருக்க, மறுபுறம் பல உளவியல் தாக்கங்களையும் எம்மையறியாமல் எமக்குள் தாக்கம் செலுத்துகிறது. இவ் விடயத்தை சின்னத்திரையில் பாத்திரமாக நடித்த ஒரு நடிகையே ஒப்புக்கொண்டுள்ளார். அவரே அவ்வாறான பாத்திரத்தை ஏற்று நடித்து விட்டேன் ஆனாலும் நான் மக்களுக்கு இவ்வாறாகக் கருத்துகளை விதைத்து விட்டதைக் கவலையுடனும், வருத்தத்துடனும், தெரிவித்திருந்தார்.

ஒரு எண்ணமானது இன்னொருவரின் எண்ணத்தில எத்தகைய தாக்கத்தை விளைவிக்கிறது என்பதை மகாத்மா காந்தியின் சத்திய சோதனை என்ற நூலில் வாசித்து அறிந்தேன். தனது ஒரு அநுபவத்தை அதில் கூறியிருப்பதை அறியக் கிடக்கிறது. மகாத்மா காந்திக்கு சிறையில் இருக்கும்போது, ஒரு நாள் தன் தாயைக் கொல்வதாக ஒரு கனவு ஏற்பட்டது. ஏன் எனக்கு இப்படிக் கனவு, எனப் பலவாறு எண்ணினார். அப்போது அன்று தாயைக்கொன்ற, ஒரு சிறைக் கைதி உணவைத் தயாரித்ததை அறிந்திருந்தார். அந்தக் கைதியின் குற்றவுணர்வோ அல்லது அந்த சம்பவமோ அவர் தயாரித்த உணவை உண்ட, மகாத்மா காந்தியின் கனவுக்குக் காரணமானதாக அமைந்தது. இவ்வாறுதான் தொலைக்காட்சித் தொடர்கள் ஒருவருக்கு விபத்து ஏற்படுவதாகவும், அதனால் அம்மாவுக்கு மாரடைப்பு, ஏற்படுவதாகவும் அதனால் அக்காவுக்கு கருக்கலைகிறதாகவும் காண்பிக்கப்படுகிறது. இவ்விதம் பரபரப்பாக எம்மவர்களை வைத்திருக்கிறார்கள் இவையெல்லாமே வர்த்தகத்தையும், பணத்தையும் மட்டுமே நோக்காகக் கொண்டு மக்களை நோயாளிகளாக்குகிறார்கள் என்பது மட்டுமே ஒளிந்து கிடக்கும் உயரிய உண்மை.

"ஆழ்ந்த தூக்கத்தில் தான் ஆரோக்கியம் உள்ளதாம்." ஒருவர் நித்திரைக்குச் செல்லும்போது இறுதியான மணித்துளிகளில் நாம் எதனையும் சிந்திக்காது, அமைதியாக எண்ணங்களை ஒருமுகப்படுத்தி, நித்திரைக்குச் செல்வது. நல்லது.

ஆனால் எம்மில் பலர் கொடூரமான, பழிவாங்கும் பாங்கிலான, திகிலூட்டும் பாணியிலான பல வற்றைச் சின்னத்திரைகளிலும், ஏன் திரைப் படங்களிலும் பார்த்தவாறே, கட்டிலில் கண் அயர்கிறோம். இவை பலரது இரத்தக் கொதிப்பு வியாதிக்கும், உயர் இரத்த அழுத்தத்திற்கும், மன அழுத்தத்திற்கும் எனப் பல வியாதிகளுக்கும் காரணமென ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். சில நல்ல தொடர்களை, பொழுதைப் போக்கக் கூடிய வற்றை, சுவாரசியமானவற்றைப் பார்க்கலாம். ஆனால் அதற்கு அடிமையாகாமல் இருப்பது உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும். "எமது உடல் இறைவனின் ஆலயம்"

– திரேஸ் மரியதாஸ்

# சோதனைகள் நம்மைப் புடமிடுகின்றன

நீங்கள் நம்பிக்கை அற்றவரா? இந்தப் பிரச்சனைக்கு விசுவாசம் தீர்வு. நம் வாழ்வில் எல்லா திட்டங்களும் வேலை செய்யாது. உங்களுக்குக் கஷ்டங்கள் வரும் போது கவலைப்படாதீர்கள் ஏனென்றால் கடவுள் உங்களுக்காக மிகச் சிறந்த திட்டங்களை கொண்டிருக்கிறார். எரேமியா 29:11 கூறுகிறது. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல,

சமாதானத்துக் கேதுவான நினைவுகளே. கடவுள் நம் வாழ்வில் நமக்கு என்ன தேவை என்பதை அறிந்திருப்பார். எனவே நாம் அவரின் திட்டத்தை அறிந்து கொள்ள முடியாது. நம் வாழ்வில் எதுவுமே நிரந்தரமானவை அல்ல. சில சமயங்களில் நாம் வைத்திருக்க விரும்பும் விடயங்களைகளை இழந்து விடுகிறோம்.

நமக்கு ஒரு நல்ல வாழ்க்கையை உருவாக்குவதற்கு கடவுள் நம்மிடம் சில காரியங்களை எடுக்கிறார். நாம் முதலில் கடவுளிடம் நம்பிக்கை வைப்பது அவசியம். உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மைப்படுத்துவார். (நீதிமொழிகள் 3:5,6)

கடவுள் அவரிடம் வருபவர்களை என்றுமே கைவிட மாட்டார் எனவே நாம் கடவுள் மேல் முழு மனதோடு நம்பிக்கை வைக்க வேண்டும். ஒரு தாய்க்கு தன் குழந்தைகளுக்கு என்னென்ன தேவை என்பது அவளுக்கு நன்றாக தெரியும். அப்படியானால் கடவுளின் பிள்ளைகள் ஆகிய நமக்கு அவர் ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதை நாம் ஏன் புரிந்து கொள்ள முடியாது.

நாம் ஒரு கஷ்ட துன்பத்தை அனுபவிக்கும் போது அதில் ஒரு மறைவான ஆசீர்வாதம் எப்போதும் இருப்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை தெரிவியுங்கள். (பிலிப்பியர் 4:6-7)

**Miss
Shiyana Charles Milton Keynes**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விவிலியப் புதிர் போட்டி இல: 01

விவிலிய புதிர் போட்டியில் சரியான விடைகளை எழுதியோரில் குலுக்கல் முறையில் மூவர் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

**1 ஆம் பரிசு - £ 25.00**

**2 ஆம் பரிசு - £ 15.00**

**3 ஆம் பரிசு - £ 10.00**

உங்கள் பெயருடன் முகவரியை குறிப்பிட மறவாதீர்கள். ஏனைய திறமைசாலிகளின் பெயர்கள் வேர்களில் பிரசுரிக்கப்படும்.

உங்கள் விடைகளை 31.01.2018க்கு முன்னர் அனுப்பி வையுங்கள்

**பரிசுகளின் அனுசரணையாளர்கள்:**

திருமதி நொயிலின் மரியபாலநாயகம் &
திரு இக்னேசியஸ் யூட்ஸ்ரிபன்

**தொகுப்பு:** திருமதி. நொயிலின் மரியபாலநாயகம்


**Please write your answers:**
Tamil Catholic Chaplaincy London
304, Garratt Lane, Earlsfield,
SW18 4EH, United Kingdom
Phone: 00442088706257
E-mail: tamil.chaplaincy@aol.co.uk or
verkalgb@gmail.com

### பழைய ஏற்பாடு

01) பழைய ஏற்பாடு என்றால் என்ன?
02) பழைய ஏற்பாட்டில் உள்ள மொத்த நூல்கள் எத்தனை?
03) பழைய ஏற்பாட்டு மொத்த நூல்கள் எப்பொழுது எழுதப்பட்டன?
04) பழைய ஏற்பாட்டின் முதல் நூல் எது ?
05) தொடக்க நூலின் ஆசிரியர் யார் ?
06) பழைய ஏற்பாட்டின் கடைசி நூல் எது ?
07) 2 மக்கபேயர் என்னும் நூலின் ஆசிரியர் யார் ?
08) பழைய ஏற்பாட்டு எந்த மொழியில் எழுதப்பட்டது ?
09) பழைய ஏற்பாட்டு நூல்கள் எப்படி பிரிக்கப்பட்டுள்ளது ?
10) கடவுள் முதல் நாளில் எதைப் படைத்தார் ?

### புதிய ஏற்பாடு

01) புதிய ஏற்பாடு என்பது என்ன?
02) புதிய ஏற்பாட்டில் உள்ள மொத்த நூல்கள் எத்தனை?
03) புதிய ஏற்பாடு நூல்கள் யாவை?
04) புதிய ஏற்பாடு எப்போது எழுதப்பட்டது?
05) இவ் 27 நூல்களையும் தொகுத்தளித்தவர் யார்?
06) புதிய ஏற்பாடு ஏற்பாட்டு நூல்களின் ஆசிரியர்கள் யாவர்?
07) புனித பவுலடியார் எழுதிய திருமுகங்கள் எத்தனை? அவை யாவை?
08) புதுத் திருமுகங்கள் எனப்படுபவை யாவை?
09) ஆக மொத்தம் எத்தனை நூல்கள்?
10) மத்தேயு நற்செய்தி யாருக்காக எழுதப்பட்டது?




**ACROSS**

1. Right Judgement
3. Courage, stands up for difficulties
4. Greatness of God, wonder and awe, to do in God's will
6. Reverence and respect
7. This lets us see the world as it is

**DOWN**

2. Helps you to make the right choices
5. Lets us judge things in the way God does

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்தியா படுகொலையும் நீதிமன்றத் தீர்ப்பும்!

**– அருட்பணி எஸ். எ. றொஷான் –**

விடுதலைப் போராட்டத்தை தனி ஒரு இயக்கத்திடம் ஒப்படைத்து விட்டு வேடிக்கை பார்த்தது போன்று குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை தண்டிக்கும் பொறுப்பையும் நீதிமன்றத்திடம் மாத்திரம் ஒப்படைத்து விட்டு இருக்க முடியாது - சமூகத்திற்கும் பாரிய பொறுப்பு உள்ளது என யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பாதுகாவலன் பத்திரிகையின் வார இதழ் ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. "வித்தியா படுகொலையும் நீதிமன்றத் தீர்ப்பும்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தின் விபரம் வருமாறு:

மரண தண்டனை கிறீஸ்த்தவ பார்வையில் ஏற்புடையதல்ல. பழிக்குப்பழி என்பதை கத்தோலிக்க திருச்சபை நிராகரிக்கின்றது. ஆனாலும் புங்குடுதீவு மாணவி சிவ லோகநாதன் வித்தியா படுகொலை செய்யப் பட்டமை தொடர்பாக யாழ் மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அனைத்து சமூகத்திற்கும் மகிழ்ச்சியான செய்தி. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என எல்லோருமே எதிர்ப்பார்ததிருந்தனர். 18 வயது நிரம்பிய பாடசாலை மாணவியை பட்டப்பகலில் கடத் திச் சென்று மிலேச்சத்தனமான முறையில் பாலியல் பலாத்காரம் புரிந்து கொலை செய் தமை மன்னிக்கப்படக்கூடியல்ல.

அதுவும் வளர்ச்சியடைந்த வெளிநாடு ஒன்றில் இருந்து தாயகப் பிரதேசத்திற்கு வருகை தந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமை நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த குடும்பம் ஒன்றின் இளவயது பிள்ளைக்கு நடந்த கொடுரம் இனிமேலும் யாருக்கும் நடந்துவிடக் கூடாது என்பதை யாழ் மேல் நீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலமாக சொல்லியிருக்கின்றது.

ஆனாலும் இங்கே மூன்று கேள்விகள் எழுகின்றன. ஒன்று வித்தியாவை உருவாக் கியதும் இந்த சமூகம்தான். வித்தியாவை பாலியல் பலாத்காரம் புரிந்து கொலை செய்ததும் இந்த சமூகத்தில் உள்ளவர்கள் தான். எனவே இந்த தீர்ப்பின் மூலம் எமது சமூகம் திருந்திவிடுமா? இரண்டாவது பழிக்குப் பழி என்பதை கத்தோலிக்க திருச் சபை நிராகரிக்கின்றது. எனவே மரண தண்டனை தீர்ப்பின் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பம் திருப்தியடையாது.

மூன்றாவது வித்தியா மாத்திலமல்ல எண் ணிலடங்காத பாலியல் பலாத்கார கொலை கள். அது பற்றிய வழக்குகள் கிடப்பில் உள் ளன. ஆகவே வித்தியா கொலை வழக்கை விசாரணை செய்த யாழ் மேல் நீதிமன்றம் குறிப்பாக கொழும்பில் உள்ள சட்டமா அதிபர் திணைக்களம் ஏனைய பாலியல் பலாத்கார வழக்குகளையும் துரிதமாக விசாரணை செய்ய வேண்டும்.

மரண தண்டனை வழங்குவதைவிட குற்ற வாளிகள் இனம் காணப்பட்டு சமூகத்தின் முன் அவர்களை அம்பலப்படுத்தினாலே போதும். அதேவேளை நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் தண்டனை கொடுக்கப்பட்டு சமூ கத்தை திருத்தலாம் என நினைப்பதும் தவறு. வித்தியா விடயத்தில் நீதிமன்றம் தனது கடமையை சரிவர செய்துள்ளது.

ஆனால் சமூகத்தில் உள்ள பொது அமைப் புகள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் ஆகியோ ருக்கும் பொறுப்புள்ளது. சமூக வன்முறை களை கட்டுப்படுத்தக்கூடிய வேலைத் திட் டங்களை தனியே நீதிமன்றங்களிடம் ஒப் படைத்துவிட்டு இருக்கக்கூடாது. அரசியல் உரிமைப் போராட்டத்தையும் இப்படித்தான் தனி ஒரு இயக்கத்திடம் ஒப்படைத்து விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

சமூக வன்முறைகளை தடுக்கக்கூடிய கல்வி முறை குறைந்தளவில் என்றாலும் எமது பாடத்திட்டத்தில் உண்டு. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் பாலியல் கல்வியும் சமூக அக்கறையுடன் கூடிய தொழிற்கல்வியும் ஆரம்ப முதலே உள்ளன. இலங்கை போன்ற ஆசிய நாடுகளில்தான் அவ்வாறான தரத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

எமது பாடத்திட்டம் அறிவுசார்ந்த பாடத் திட்டம்தான். ஆனால் பரீட்சையை மாத்திரமே நோக்கமாகக் கொண்டு ஆசிரியர்கள் கற்பிக் கின்றனர்.

பாடத்திட்டத்தையும் தாண்டி ஆசிரியர்கள் சமூகவிழுமியங்களை பேணிக்காக்கலாம். அது குறித்து கல்வியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அதேவேளை பெற்றோரும் தமது பிள்ளை களை ஆலயங்களில் நடைபெறும் மறைக் கல்வி வகுப்புகளுக்கு ஒழுங்கான முறையில் அனுப்புவதில்லை. எவ்வாறாயினும் சமூக வன்முறைகளை முற்றாகவே இல்லாமல் செய்யவது என்பது கடினமானது தான்.

ஆனாலும் 70 ஆண்டுகால அரசியல் போராட்டம் ஒன்றை கண்ட தமிழச் சமூகம் இயல்பாகவே சமூக விழுமியங்களை பேண வேண்டும். ஏனைய ஆசிய நாடு களில் அல்லது தென்பகுதியில் இடம்பெறும் கலாச்சார சீர்கேடுகள், சமூக விரோத செயற் பாடுகளைப் போன்று தமிழர் பிரதேசங்களி லும் அவ்வாறு இடம் பெறக்கூடாது.

வித்தியாவுக்கு நேர்ந்த அவலம் தமிழ்ச் சமூகத்தை வெட்கித் தலைகுனிய வைத் துள்ளது. இதுவரைகாலமும் படையினர்தான் அவ்வாறு செய்தார்கள். ஆனால் இன்று தமிழ்ச் சமூகம் தமக்குள்ளேயே இவ்வாறான கொடூர குணங்களைக் கொண்டுள்ளது என ஏனைய சமூகத்தினர் பேசும் அளவுக்கு இழிநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தனியே நீதிமன்ற தீர்ப்புக்களை மாத்திரம் நம்பியிருக்காது அரசியல் உரி மையை கோரி நிற்கும் தேசிய இனம் என்ற உணர்வுடன் முதலில் எம்மத்தியில் தீயாக பரவி வரும் சமூகவிரோத குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பியுங்கள் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு விடுக்கும் செய்தி

**"வண்டு மலரை சந்திப்பதுண்டு நிலா வானத்தை சந்திப்பதுண்டு கடல் கரையை சந்திப்பதுண்டு நிலம் நீரை சந்திப்பதுண்டு"**

இவையாவும் அழகான சந்திப்புக்கள்தானே. ஆனால் இவற்றை விட ஓர் அழகான அற்புதமான சந்திப்பு ஒன்று நம் நடுவே பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்து விட்டது. விண்ணகம் மண்ணகத்தை சந்தித்ததாகும். ஆம் கடவுள் மனித உருவாகி மனிதனை சந்தித்தார் அதுவே கிறிஸ்து பிறப்பாகும். இவரின் வருகைக்காக நாம் நம்மை தயாரிக்கும் காலம் முடிந்து காத்திருக்கும் நம் கண்களுக்கு விருந்து படைக்க இதோ மீட்பர் இயேசுக் கிறிஸ்து பிறந்து விட்டார்.

மனித வாழ்விலே சந்திப்புக்கள் பல விதம் சில சந்திப்புக்கள் மகிழ்ச்சியை கொடுக்கின்றன சில சந்திப்புக்கள் சங்கடத்தை கொடுக்கின்றன. கண்களால் காண இயலாத கடவுள் மனிதனாக இயேசு பாலனாக மண்ணில் பிறந்த வரலாற்று நிகழ்வுதான் கிறிஸ்மஸ் விழா.

**இறைவன் ஏன் மனிதனாக பிறக்க வேண்டும் ?**

ஆதியிலே இறைவன் உலகைப் படைத்தார் உயிர்களை படைத்தார் அவற்றோடு உறவாட தன் சாயலாக மனிதனைப்படைத்தார். படைப்பின் சிகரமாக மனிதனை படைத்து அவனுக்க தன் சாயலை கொடுத்து மற்றப்படைப்புக்களிடம் இல்லாத அன்பு, பாசம், பரிவு போன்ற நற்பண்புகளை கொடுத்து உயர்த்தினார் கடவுள். ஆனால் மனிதனோ இறையுறவினிலே நிறைவு பெறாமல் அழிவுக்குரிய உறவைத் தேடி அலைந்தான். தனிவாழ்விற்கு மாறினான் கூடி வாழ்ந்தான் கோடி இன்பம் கண்டான். காயின் ஆபேலை கொன்றான் கடவுளின் அன்பை இழந்தான். கடவுளுக்கு இணையாக வேண்டுமென்று எண்ணி பாபேல் கோபுரம் கட்டினான் நோபாவின் காலத்தில் மக்கள் கடவுளை மறந்து பாவத்தில் மூழ்கினர். இஸ்ராயேல் மக்களை கடவுள் தேர்ந்தெடுத்தார். அவர்களோ திரும்ப திரும்பப் பாவச்சேற்றிலே விழுந்தனர். பல இறைவாக்கினர்கள் வழியான அம் மக்களை மனமாற அழைப்பு கொடுத்தார். அவர்கள் மனமாற்றம் அடைய வில்லை. எனவே தான் கடவுள் தம் ஒரே பேரான மகனை உலகிற்கு அனுப்பினார். கடவுள் மனிதனாக பிறந்து மனிதனை சந்திக்கவந்த நிகழ்வைத்தான் கிறிஸ்துபிறப்பு விழாவாக நாம் கொண்டாடுகின்றோம்.

இறைவனுக்கு எதிராக மனிதன் இழைத்த குற்றத்தை இறைவன் ஒருவித பரிகாரம்செய்து அவனை மீட்கின்றார். அவர் மனிதராகவும் இருக்க வேண்டும் அப்போது தான் அப்பரிகாரம் மனிதன் சார்பாக செலுத்தப்பட்டதாக இருக்கும். எனவேதான் கிறிஸ்து தம்மையே சிலுவையில் நமக்காக கையளித்தார். இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது ஏழைகளோடும் சமூதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களோடும் குழந்தைகளோடும் அன்பு கொண்டிருந்தார். இதன் மூலம் மறைந்து போன மனிதத்தை மண்ணில் நிலை நாட்டினார். புதைக்கப்பட்டிருந்த மனிதத்தை மாண்புற செய்தார். இயேசு இந்த மண்ணில் மனிதனாக பிறப்பதற்கு இரண்டு காரணங்கள்தான் உண்டு.

1.மரியாளுக்கு காட்சி கொடுத்த போது அதிதூதர் கபிரியேல் இதோ கருவுற்று ஒரு மகனை பெறுவீர் அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர் என்று சொன்னார். இயேசு என்ற பெயருக்கு மீட்பர் அல்லது இரட்சகர் என்று பொருள். அவர் நம்மை மீட்பதற்காக வந்தார்.

2.இறைசாக்கினர் எசாயா முன்னுரைத்தபடி இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனை பெற்றெடுப்பார் அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவீர் என்று முன்னுரைத்தார். இம்மானுவேல் என்பதன் பொருள் கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்று அர்த்தமாகும். இந்த இரண்டு செய்திகளும் நமக்கு சொல்லுவது இதுதான். இயேசு நம்மை இரட்சிக்க வந்தார் நம்மோடு குடியிருக்க வந்தார். இறை மகன் இயேசு அன்று மட்டும் பிறக்கவில்லை இன்றும் பிறந்து கொண்டுதான் இருக்கின்றார். ஏழை எளியவர்கள் கைவிடப்பட்டவர்கள் முதியவர்கள் என ஒவ்வொருவரையும் அன்பு செய்கின்றபோது அங்கே இயேசு பிறக்கின்றார்.

ஏழை உள்ளம் கொண்டவர்களே தம் அரசில் நுழையக் கூடியவர்கள் என்று காட்டவே எம் இறைமகன் தம் ஒரே மகனை ஏழ்மையின் உருவில் இவ்வுலகிற்கு அனுப்பினார். ஆனால் நம் கண்முன் தோன்றுவது குதுகலமான கொண்டாட்டமாகும். வெறுமனே உண்பதும் குடிப்பதும் உல்லாசமாக பட்டாசு வெடிப்பதும் அல்ல கிறிஸ்மஸ். அதன் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து செயற்படல் வேண்டும். ஆறு நாட்களாக தனது ஆற்றலையும் சக்தியையும் பயன்படுத்தி அன்பின் மிகுதியாய் உலகத்தை படைத்தார். இவ்வுலகு ஒரு சிறுதவறினால் மாசு படிந்து ஒளியிழந்து போனது. நம்மைத்தவிர வேறு யாராலும் இப்பூமியை சூழ்ந்துள்ள பாவம் என்னும் இருளைப் போக்கி மீட்பு என்னும் ஒளியினை கொடுக்கும் மீட்பராக இயேசு பிறந்ததினமே நாம் இன்று மகிழ்வுடன் கொண்டாடும் கிறிஸ்மஸ் விழாவாகும். இன்று மனிதநேயமிக்க இருதயங்களிலே இயேசு பிறக்கின்றார். **"மனிதம் இருக்கும் இடமே இயேசுபாலன் தங்குமிடம். வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை" - அன்னை திரேசா.**

வாழ்வது ஒருமுறைதான் அவ்வாழ்வு நமக்கும் பிறருக்கும் பயனுள்ளதாக அமைய வேண்டும். பொன் வேண்டாம், பொருள் வேண்டாம், மண் வேண்டாம், சுகம் வேண்டாம், மாந்தருக்கு உதவிட நல்மனம்தாரும் பாலன் இயேசுவே. இருப்பவர் இல்லாதவரோடு பகிர்ந்து வாழவும் உண்ண உணவின்றி உடுத்த உடையின்றி உறைய உறைவிடம் இன்றி வாடுவோருக்கு நம்மிடம் உள்ளதை பகிர்வோம். பரமனின் அருள் பெறுவோம்.

எங்கு பகிர்வு இருக்கின்றதோ அங்கே மகிழ்ச்சி பிறக்கின்றது. எங்கு மகிழ்ச்சி உள்ளதோ அங்கே இயேசு பாலகன் பிறக்கின்றார். எனவே பகிர்வோம் மகிழ்வோம். பிறந்திருக்கும் பாலன் இயேசுவின் இறையாசீர் பெறுவோம்.

**'ஆயிரம் முறை பெத்தலகேமில் இயேசு பாலன் பிறந்தாலும் நம் இதயத்தில் பிறக்காவிடின் என்ன பயன்'** - ஏஞ்சலூஸ் சிஸ்பிலசியுஸ்

மறையாசிரியர்
**Q.F.M. லக்ஸ்தனா, Southall**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Is Religion being commercialised?

- Maryanne Nilani Rajanayagam, Chingford, Youth

Last July, I had the chance to go to Medjugorje with my mother. At first I was sceptical, as I have to be dragged out of my house to go to church; therefore spending a week on a religious pilgrimage was a big step. I was intrigued as to where this pilgrimage was as it wasn't one that everyone hears of like Lourdes or many others. This led me to think that it will be a really small village with a small population, not really busy but attracts a minor number of tourists now and again. I arrived in Bosnia and Herzegovina with my expectations being proven right to an extent. Medjugorje was a small village with a small population, but the number of tourists, lodges, businesses, restaurants exceeded my anticipations. Medjugorje is infamously known as the place where Mary, the Queen of Peace, appeared to six teenagers. It is located near the mountainside and is a classic, contemporary style village. From the stoned pavements, to the cafes along the hillside, there are many key landmarks in Medjugorje. One key landscape is The Cross Mountain where the Stations of the Cross were placed. Another influential site is the Apparition Hill where Mary first appeared to the teenagers. Having gone there, I found out that although now it is a popular pilgrimage site, years ago no one would have heard of Medjugorje. The staff at the lodge (I was staying at) told me, that 20 years ago the locals would have looked at foreigners with a sense of awe and amazement, but now it has become normal for them as Medjugorje has become a popular site of tourism and pilgrimages.

My first trip was to Apparitions Hill. Almost 20 years ago, six teenagers (Mirjana, Ivanka, Marija, Jakov, Vicka, Ivan,) whilst playing on the hill had a vision from The Virgin Mary. While I was there, I had the privilege of seeing one missionary, Mirjana, who is said to have visions of Mary on the second day of every month. She was only set to appear at around 11 in the morning, but the locals, pilgrims and... **(Cont. P. 18)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆண்டுகளாக ஒருவர் ஒரு நிர்வாக உறுப்பினராக இருக்கும்போது, பல்வேறு அதிகார துஸ்பிரயோகங்கள் நடைபெறுவதுதான் யதார்த்தமாகக் காணப்படுகிறது. இதனைக் குருவானவர் கண்டுணர்ந்தாரோ, தெரியவில்லை இரண்டு ஆண்டுகளுக்கு மேலதிகமாக, ஒருவரும் ஒரே பொறுப்பை வகிக்க முடியாதபடி, நிர்வாக அலகு மாற்றப்பட்டுள்ளது இந்த அற்புதமான, ஆக்கபூர்வமான சிந்தனை, பல வரவேற்கத்தக்க நல்ல முன்னேற்றங்களை, பணித்தளங்களில் காணக்கூடியவாறு ஏற்படுத்தியுள்ளது. சிறப்பாக மனிதத்தை மதிக்கப் பாலமாக அமைந்துள்ளது அதாவது குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பின்பு, நானும் சாதாரண மனிதன் ஆகிடுவேன், என்பதை உணர்ந்து, ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் அரவணைத்து செல்வதை கண்கூடாகக் காணமுடிந்தது. அதுமட்டுமன்றிப் பலரது திறமைகளைப் பயன்படுத்தவும், புதியவர்களை உள்வாங்கவும் வழி கிடைத்தது. வயோதிபத்தை வசந்தமாக்கியமை. வயோதிப வயதையடைந்த பெற்றோர் தனித்து விடப்படக்கூடாது என்றும், அவர்கள் மகிழ்ச்சியாக வாழவைக்க வேண்டும், என்ற எண்ணத்தைக் கருத்தில் எடுத்து, அதற்கான திட்டத்தை அருட்பணி செபமாலை செபநேசரட்ணம் முன்னெடுத்தார்.

இதன் முதற்கட்டமாக ஏள்ஸ் வீல்ட் பங்கின் தொடர்பாளர், சுகந்தியின் ஏற்பாட்டில் திரு. திருமதி செல்வா வீட்டில் இதற்க்காகக் குருவானவரின் தலைமையில், வயோதிபப் பெற்றோருக்கான நிகழ்வு தொடக்கி வைக்கப்பட்டுள்ளது "இவ்வமைப்பு தொடர்ந்து செயற்பட வைக்க வேண்டியது அவசியமானது" என்ற செய்தி, எமது குருவானவரால் அன்பான அறிவித்தலாகக் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, வொளிங்ரன் பங்கிலும், இச் சேவை தொடக்கி வைக்கப்பட்டு, தொடர்ந்து இப்பணியை முன்னெடுப்பதாக, உறுதியையும் எடுத்தார்கள். இவை எமது இயக்குநரின் திட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகவே இந்நிகழ்வைப் பெற்றோரும் மற்றோரும் மனமார வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

■ இளையோருக்கான மறைக்கல்விப் போட்டிகள்

■ பங்குத்தளங்களை விஸ்தரித்து முறையான நிர்வாக கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

■ குடும்ப விழா

■ TCA (UK) 30 வது (Pearl) வருடாந்த இராப்போசன ஒன்று கூடல்

■ வேர்ச் சஞ்சிகை - பொதுநிலையினர் மயமாக்கப்பட்டது

■ இலண்டனில் இறைஇல்லம் - விஸ்த்தரிக்கும் முயற்சி

நன்றி என்ற மூன்று சொற்களைக் கூறுவதற்கு நாம் இங்கு முனையவில்லை. நல்லது பலதைச் செயலில் நற்செயல்களாகக் கண்டு உணர்ந்ததை நாம் நினைக்கிறோம். அந்த நினைவுகளை நெஞ்சத்தில் சுமந்து நிற்கிறோம். அவைகளே இன்று நாலு




பேர் அறிய, எழுத கூற வைத்துள்ளது. அதிகமான குருக்கள் திருப்பலியையும் அதனுடன் தொடர்பான விடயங்களையும் ஆற்றுவதற்கே நேரம் போதுமாகி விடுகிறது. எமது பங்குத்தந்தை செபநேசனோ அதோடு இணைத்து இளையோர் மறைக் கல்வி தொடக்கம் முதியோர் அமைப்பு வரை அனைத்தையும் அமைக்க வழிசெய்தார். அனைத்தையும் ஆக்கபூர்வமாகச் செயற்பட அரும்பாடுபட்டார். இச் செயற்பாடுகள் எம் வாழ்வோடு கலந்துவிட்டது. எனவே இவைகளின் செயல் வடிவமானது நன்றி என்ற சொற்களுக்குள் உள்ளடக்கி விடுவது என்பது முழுமை பெறாததாகவே எமக்குப் புலப்படுகிறது. ஆனாலும் இங்கு நாம்கண்ட, அறிந்த, அந்தச் சொல்லையே யாம் பயன்படுத்த வேண்டியுள்ளதால், அதனையே கூற வேண்டிய நிர்ப்பந்தத்தால், நன்றி, நன்றி, என்று நவின்று நிற்கிறோம்.

**நன்றி**

"நன்றே செய் அதை இன்றே செய்" அதனை அருட்பணியாளர் செபநேசரட்ணம், இலண்டன் வாழ் மக்களுக்கு வாழ, வழிபாடுகளூடாகக் கண்டுணர், வழிகள் பலவற்றை அகலத்திறந்து காட்டியுள்ளார். திறந்துவைத்த பாதைகள் வழியே, சீராகவும், செம்மையாகவும், நடைபயின்று, இறுதியில் இறை பயணத்தை வெல்வது எம் ஒவ்வொருவரின் கடமையும், பொறுப்புமாகும்.

**புதுமை**

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற உயரிய, சிந்தனைக்கேற்ப, நாம் எம்மை மாற்றாவிட்டால் நாம் காணாமல் போயிடுவோம், என்ற நவீனத்துவ சிந்தனைகள் வாழ்க்கைக்கு மட்டுமல்ல, வழிபாடுகளுக்கும், இன்றியமையாததாகக் காணப்படுகிறது என்பதை செயற்படுத்தியுள்ளார்

அவ்வகையில் திருப்பலியின் நேரத்தைக் கருத்தில் கொண்டு பாடல்களையும், பிரசங்கத்தையும் மட்டுப்படுத்தி, திருப்பலியை அர்த்தமுள்ளதாக்கி, பக்தியை வளர்க்கக் குருவானவர் வழி பல செய்தார். திருப்பலிப் பாடல்களைத் தாள்களில் அச்செடுப்பதைக் குறைத்து பெரிய திரைகளில் (projector) பாடல்களை பார்த்துப் படிக்க அனுமதியளித்தார். இதுபோன்ற பல நல்ல விடயங்களைக் காலத்தின் தேவையறிந்து, களம் பல அமைத்துப் புதுமையைப் புகுத்தியுள்ளமை. உள்ளத்திலும், எண்ணத்திலும், புன்முறுவலையும் பூரிப்பையும் பூர்க்க வைத்துள்ளது. காலத்தோடு சேர்ந்து கடவுளையும் இணைத்து ஓட, கால்களுக்குச் சரியான காலணியாக அமைந்து விட்டது குருவானவரே வாழ்க உங்கள் பணி. எனப் பாதம் பணிந்து, நன்றியுடன் நினைத்து நினைத்து நிற்கிறோம் ●





## இளையோர் அறிய இதழுக்கோர் கத்தோலிக்க மணம் கமழும் ஊர்

தாயகம் கிளிநொச்சியில் கிளாலி எனும் கிராமத்தில் 98% கத்தோலிக்கரும், ஐந்து ஆலையங்களும், பத்துக்கும் மேற்பட்ட குருக்கள் கன்னியர்களும் உள்ளனர். இந்தச் சிறிய ஊர் இத்தனை அருட்பணியாளர்களைத் தன்னகத்தே கொண்டது எல்லோருக்கும் பெருமையே.

அதிலும் அதன் முதலானதும் முதன்மையானதுமாக ஒரே குடும்பத்தில் குருவும் கன்னியாஸ்திரியுமாகிய அருட்பணியாளர் மா. றெஜிஸ் இராசநாயகம் மற்றும் அவரது சகோதரி கன்னியாஸ்திரி அன்ரனீற்றா ஆவார்கள். இறுதிப் போரின் இறுதியான கடற் பயணப் பாதையே கிளாலி தானே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The education of this generation and their lifestyle



- Rev Sister Antonita Mark JHC -

The knowledge that is attained through education helps open doors to a lot of opportunities to succeed in our life. If we try to gain an education with determination and through hard work, we can learn. Since education is often described like an ocean or sometimes it is said that education is from womb to tomb, we can simply understand the value an importance given to education. But today, there is a big question very often raised by many, whether the education gained is truly practiced in real life situations. Especially, are the youth of today's generation journeying in the path they should travel in accordance with the education they have had?

Education today is not as it was in our country many decades before. It was a difficult task and only monasteries provided children the opportunity to learn. Children had to stay in the monasteries and look after the needs of the teacher who in return taught stories, poems and songs etc. Before they learn anything, they had to learn discipline, self-control, patience, honesty, sacrifice and compassion from their teachers while serving them in the monasteries. That's why those students who belong to that period are still remembered for their highly praise-able attitudinal behaviour.

By reading our ancient myths and legends we can understand the loyalty of students to their teachers. In great "MAHABARATHAM" loyalty is superbly described in the scene where the student sacrificed his right-hand thumb to his teacher as gratitude is a good example to show gratefulness. In literature, we read how "KARNAN" tolerated the unbearable pain caused by a monstrous insect that pierced through his thigh in order not to disturb his master's sleep.

Today's education system is quite different from the ancient one. The government has decentralised education by providing free textbooks compared to the very expensive education of that time. Today's children pay nothing or need not sacrifice anything for their education. Everything is provided free of charge. Teachers go in search of students to provide education and it was vice versa in the past. But do the children use the education they have had in their practical life is an unanswerable question.

Since education has become a free gift to most of our youth, they often fail to realise the value and importance of it. In the meantime, the assistance provided by friends and relatives who live abroad makes our students to neglect their studies. Most of the male students think and have a passion

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for money that "can be earned in foreign countries. Even the female students who have negative thinking than their counter parts too prepare themselves for a foreign marriage (husband) spend their school time living in a dream world for a foreign life.

It is estimated that the government spends approximately 15 lakhs for every student on his free education. If a student is able to serve in this country after his education, the money spent for education will be worth. If not, the result will be brain drain that causes shortage of workers in development projects. Many students who have completed their A/L leave schools and get into bad companies or gangs and become a burden to parents and the society they live in. They are likely to be attracted by drug traffickers and other illegal organization to work for them for money. Finally when they are unable to live a happy life they end up their life jumping in front of the running train or into water ways. Apart from these, there are good news coming from various corners about unbelievable achievements of a handful of students who have followed the path of their teachers and elders too. A very minute percentage of our youth can be praised fort heir life style which they have gained through education."

Those who couldn't make use of the free education by the state flock to the education centres that are privately run by business minded teachers in every nook and corner of the country where these children deposit their money and wealth just as same as in a finance company that can go bankrupt at any moment. The tuition centres are becoming more rich and richer day by day ●

# அன்பில் வெளிப்படும் விசுவாசம், தொட்டுணரக் கூடியதாக உள்ளது



'விசுவாசம் என்பது, அன்பில் தன்னை வெளிப்படுத்தும் போது, குறிப்பாக, துயருறும் சகோதர சகோதரர்களுக்காக ஆற்றப்படும் பணியில் தன்னை வெளிப்படுத்தும் போது, அது தொட்டுணரக் கூடிய தாக உள்ளது' என, தனது டிவிட்டர் பக்கத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் செய்தி வெளியிட்டுள்ளார்,

துன்பத்தில் இருப்போருக்கு உதவ வேண்டிய தேவை குறித்து தனது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது செய்தியில், மாற்றுத் திறனாளிகளை வரவேற்க வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தி, 'ஒவ்வொரு மனிதரும் தனித்தன்மையுடையவர், அவருக்கு இணையாக இன்னொன்றை இட்டு நிரப்ப இயலாதவர்.

ஆகவே, மாற்றுத் திறனாளிகள் அனை வரும் தாங்கள் வாழும் சமூகத்தில் எப்போதும் வரவேற்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்வோம்' என எழுதியுள்ளார்.



## ஆராரோ ஆரோ பாலக இயேசுவே...

ஆராரோ ஆரோ ஆராரோ - ஆரோ
ஆராரோ ஆரோ பாலக இயேசுவே

மரித்துவிட்ட மனிதம்
மறந்துவிட்ட மனித மனம் - காக்க
மண்ணில் மனுவான மரிபாலனே
(ஆராரோ)

குருதிதொட்ட மனிதம்
கூவியழைக்கும் மனிதமனம் தேடி
குழந்தையுருவில் பிறந்த குலமகனே
(ஆராரோ)

தன் நம்பிக்கையை நாற்றறுத்து
நசிந்திருக்கும் - எமக்காய்
நசரேயனாகிய நல் பாலகனே
(ஆராரோ)

- இம்மாகுலட்-

## விந்தையான, விழிகளை உயர்த்தி, விளிப்படைய வைத்த சமூகக் கருத்துகள்!

எமக்கென ஒரு ஆலயம் தேவை என்ற எண்ணம் வலுப்பெற, வாழ்த்துகளையும், ஆசிகளையும் வழங்கி மகிழ்கிறேன். - பெர்ணாண்டோ, கனடா.

ஏற்கனவே நூல் வடிவில் வெளியாகியுள்ள சரிதைகளையும், நீண்ட ஆக்கங்களையும் தவிர்த்துக் கொள்ளுதல் சஞ்சிகையை மேலும் தரமாக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன் - மேரி பிரான்ஸ்

சமூகத்தோடு ஆன்மீகம் பின்னிப் பிணைந்து பயணிக்கச் ,வேர்ச்சஞ்சிகையானது சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். அன்ரனீற்றா றெக்சி, இலங்கை.

இலைமறை காய்களாக இருந்தவர்களுக்குக் எழுதக் களம் அமைத்துக் கொடுத்ததற்கும், தொடர்ந்து மென்மேலும் சஞ்சிகையானது தரத்துடன் மிளிரவும், வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம். செல்வா,தாஸ், லீலா ரவி, பலாலி

**Please send all your comments to : verkalgb@gmail.com**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருட்செல்வத்தைத் தேடி அருட்செல்வத்தை இழப்பதா?

- அருட்பணி மா.றெஜிஸ் இராசநாயகம் -

**முகவுரை**

பொருளாதாரத்தை முதன்மைப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நுகர்வுக் கலாசாரத்தினால் இன்று பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம் உலகத்தை ஒரு சந்தையாக மாற்றிவிட்டது. இச் சந்தை மனிதனையே இலக்காகக் கொண்டதினால் அவன் அதில் சிக்குண்டு நுகர்வுக்குத் தேவையான பொள்ளீட்டுவதிலேயே இரவு பகலாக தன் முழுக்கவனத்தையும் செலுத்தி தன் மகிழ்ச்சியை இழந்து விடுகின்றான்.

**மனிதன் பொருளுக்கு சமமானவனா?**

இன்றைய நுகர்வுக் கலாசாரத்தில் மனிதனின் மாண்பு, மகத்துவம் என்பன மழுங்கடிக்கப்பட்டு மனிதன் ஒரு பொருளாகக் கருதப்படுகிறான். இன்று அரசோ ஏனைய நிறுவனங்களோ பொருளைப் பயன்படுத்துவது போலவே மனிதனைப் பயன்படுத்துகின்றன. எவ்வளவுக்கு ஒரு மனிதனைப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவனைப் பயன்படுத்திவிட்டு அதன் பின்னர் அவனை ஒரு வேண்டாப் பொருளாக வெளியேற்றிவிடுகின்றன. .ன்று வயோதிபர் இல்லங்களில் உள்ளவர்களோடு உரையாடினால் இவ்வுண்மை நன்கு புலப்படும்.

**இரு பரிமாணங்கள்:**

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பொருள் பயனுள்ளதென்றால் அது அவசியமானது. பொருள் தான் எல்லாம் அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலை நோக்கை தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனங்கள் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர்களையுமே தேடாது விடுகிறான். அப்படித் தேடினாலும் சுய தேவைக்கே தேடி அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கிறான்.

**மனித முன்னேற்றம்:**

"பேராசையோடு சொத்தைத் தேடுதல் தனி மனிதனின் தன்னிறைவுக்கும், மனித மாண்புக்கும் பெருந்தடையாக அமையும். "பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளிவான காரணி" என்கிறது 'மனித முன்னேற்றம்' என்னும் கத்தோலிக்க திரு அவையின் திருத்தந்தை 6ம் பவுலின் சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதை சுட்டி நிற்கிறது.

**அறிவற்ற செல்வன்:**

நாம் சேர்த்துவைக்கும் பொருட்கள் அனைத்தையும் ஒருநாள் இழக்க வேண்டும். இதை விளக்க விவிலியத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. 'செல்வன் ஒருவனின் நிலம் நன்றாக விளைந்தது. அவன் "நான் என்ன செய்வேன்? என் விளைபொருட்களைச் சேர்த்துவைக்க இடமில்லையே! என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்கி என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்து வைப்பேன். பின்பு, என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. நீ உண்டு, குடித்து மகிழ்ந்திரு என்று சொல்வேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால், அன்றிரவு கனவில் அவனுக்கு ஒரு குரல் கேட்டது. "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" 'பலருடைய வாழ்வில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் பார்த்த பின்பும் இவை எமக்குச் சுடலை ஞானமாகவே நின்று விடுகிறது. அதாவது அந்தக் கணத்துடன் நின்றுவிடுகிறது.


**இறுதி வார்த்தைகள்:**

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்:

"உலக வர்த்தகத்தின் உச்ச நிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை அற்ப மகிழ்ச்சி. மரணம் என்னை அண்மித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமையென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தை மட்டுமே வாழ்வில் குவித்த அதே வேளை வேறு முக்கியமானவைகளைக் கை நெகிழ்ந்து விட்டேன். என்பதை உணருகிறேன். உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமியங்களையும் நான் தேடியிருக்க வேண்டும்". சொத்துக்களின் தொடர் தேடல் ஒருவரின் தொலை நோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்பு செய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன் கூட வருவது என் அன்புச் செயல்களைத் தவிர வேறு எவை? "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?"

**இவர் யாரோ?**

இழந்தவற்றில் எதையும் மீளப்பெற்றுக் கொள்ளலாம். ஆனால் வாழ்வை? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும். "உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்." இறப்பின்போது இந்த இறுதி வார்த்தைகளை உதிர்த்த உதடுகள் யாருடையவை என்று வியக்கிறீர்களா? இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. மசிந்ரொஷ் கணனி, அப்பிள் கணனி, ஐ போன், ஐ பாட், ஐ பொட் என்பவற்றைக் கண்டுபிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜோப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங்களை ஊடறுத்து செல்லுகின்றன அல்லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின் தொடருமோ?



இவற்றையே கத்தோலிக்க திரு அவையின் இறைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும்போது: "வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்" என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள் முன் வெறுங்கையராக நிற்க மாட்டோம்.

"அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்" என்றார் பொய்யா மொழிப்புலவர்.

அதவாது தீதின்றித் தேடுகின்ற பொருள் நமக்கு புண்ணியத்தையும் .ன்பத்தையும் தருகிறது. மனத் தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம் உயரும், வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாசாரத்துள் மூழ்கி மடிய வேண்டி ஏற்படும் ●

**அடுத்த இதழில் படரும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Crowds flock to Wattala Church to witness 'miraculous' sight

Excited Catholics and many others were seen rushing into St. Anne's Church in Wattala to get a glimpse of a picture of Jesus Christ, where droplets of sweat were seen emerging from the forehead of the image of the blessed Saviour in what seemed to be a modern day miracle.

Parish Priest of St. Anne's Church, Wattala, Rev. Fr. Sanjeev Mendis, said the watery droplets similar to that of sweat had been flowing from the picture since October this year. "The picture was brought to Sri Lanka by a group of priests who came here 12 years ago from Chalakkudi in India. The priests had distributed several pictures to the Catholics of the area who had attended the prayer sessions. However the

tear-like droplets had been flowing from one picture which was kept in the house of a woman named Niromi Amarasinghe," Fr. Mendis said. He said the picture was brought to the church after the supernatural occurrence continued.

Niromi said she had witnessed the droplets coming from the forehead of the picture of Christ from time to time. "I noticed the changes and showed it to my mother as well and then we decided to inform the parish priest about it. We were advised to bring the picture to the church for it to be examined," she said.



"We had family problems for some time and these subsided since the miracle began. I have experienced some strange feelings which are hard to explain ever since this miracle began. I feel that Christ is alive," she added.

However, Fr. Mendis said it is difficult to make any conclusion at the movement. "There may be a scientific explanation for it but I don't know how anyone could prove it," Fr. Mendis said.




# பெற்றவர்களுக்குக் கிடைத்த பேறு பாக்கியம்

"தாயில் சிறந்தொரு கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" என்ற பொன்மொழியை பின்பற்றி வாழ்ந்த எம் சமுதாயத்தில் ஒரு குடும்பத்தின் தலைவன் தலைவிக்கு முத்துக்கு முத்தாக மூன்று புதல்வர்கள் இருந்தார்கள்.

ஆங்காங்கே ஓலைக் குடிசைகளும் கிடுகுகள் போட்டு கட்டிய வீடுகளுக்கும் இடையில் மாளிகை போன்ற அரண்மனை வீடுதான் இவர்களுடையது. உழைப்பும் விடாமுயற்சியும் கடவுள் மேல் கொண்டுள்ள நம்பிக்கையும் இவர்களை பெரிய செல்வந்தராக ஆக்கியது. தாயாரும் தன் பிள்ளைகளை கல்வி, ஒழுக்கம், இறை வழிபாடு, பெரியோர்களை மதித்தல் ஆகிய நற்பண்புகளை புகட்டி வளர்த்தார். அக் கிராமத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் பெயர் போறறும் குடும்பமாகவும் இவர்கள் விளங்கினார்கள் அந்தப் பிள்ளைகளும் தகப்பன் தாய் என்றால் தங்களது உயிர் என்றே கருதினார்கள். பிள்ளைகள் மூவருக்கும் திருமணங்கள் செய்து மருமக்கள் பேரப்பிள்ளைகள் என்று இனிதே சந்தோசமாகக் காலங்கள் கடந்து போயின. தாயும் தந்தையும் தங்களுக்கும் வயது போகின்றது என எண்ணி தங்களிடம் இருந்த எல்லா சொத்துக்

களையும் மூன்றாகப் பிரித்து கொடுத்து விட்டு அவர்களோடு இருந்தார்கள். சிறிது மாதங்களில் அக் கிராமத்தில் நாட்டுப் பிரச்சனை தொடங்கி விட்டது. அதனால் அந்த இட த்தை விட்டு கப்பலில் எல்லாவற்றையும் ஏற்றிக் கொண்டு கடல் வழியாக வேறு இடத்துக்கு சென்றார்கள். வருடங்கள் பல கழிந்தன. தாயாரும் இறந்து விட்டார். தகப்பனோ தனித்து விட்டார். முதுமையின் நிலையிலும் மனைவியை பிரிந்த கவலையிலும் பழைய காலத்தை அசைபோட்ட வண்ணம் இருந்த வேளை பிரச்சனைகள் சுமுகமாகி திரும்பவும் நம் இடத்திற்கு போகலாம் என்ற நிலமைவந்த பொழுது எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tourists started crowding around the praying and saying the rosary repeatedly. I was so amazed to see so many people at the hill, especially as the temperature was nearly 40 degrees and there was no wind or shade anywhere. The dedication shown by people on that day surprised me so much, but also made me question many things. The sudden increase in tourists and pilgrims has aided the economic growth of Medjugorje as many are now able to set up their own small businesses selling religious articles and many other things. What was first discovered as a small village where the Virgin Mary first appeared to six teenagers, was now becoming a place of great business and tourism as well. Next to the holy Apparitions Hill itself, it looked like you were walking through a shopping mall with the amount of café's, shops and restaurants there were. For many residents of Medjugorje, the sacred site is a booming tourist destination which brings in vital foreign currency. So the question I asked myself was whether Medjugorje was still a place of worship or a place of thriving businesses.

In my opinion this took away the sense of sanctity that the place should have. Another instance of this loss of spirituality was when I attended midnight Benediction. After an hour of praying and spiritual meditation, the atmosphere was instantly disrupted by people putting up the flag of Bosnia and waving it around. In a place where religion teaches us to love each other no matter what nationality, gender, race someone was, this one action made me and my companions feel segregated and individualised as we were left to feel as though we weren't a part of the celebration. This concept of commercial[isation hasn't just occurred in Medjugorje but also in more famous pilgrimage sites such as Lourdes and Rome.

However, it is argued that this does not take away the religious aura of the place, as the individual decides to go to the shops to buy souvenirs and is not forced to do so by the church. It is also contested that the actual place of sanctity, if visited and prayed in in the right frame of mind, it doesn't actually affect the general feeling. Commercialisation is just a plus that the locals experience from the substantial boost of the economy and the creation of jobs. Those who go there to worship should be able to separate themselves from the two conflicting atmospheres.

Therefore, having looked at my whole journey during the pilgrimage, I did feel that when I was inside the church or when I was climbing Cross mountain, I didn't feel disconnected just because there were shops outside selling rosaries or holy rocks. The mind-set that you bring when going on a pilgrimage is essential to how your time at the pilgrimage will be. Locals taking advantage of the business isn't wrong, that's a source of income for them, whether we help that business or not is a different question. But when you go to pray, you shouldn't let anything distract you from what you want to do. Although the place can become commercialised, religion cannot as that is down to how we set our minds ●



## யாவரும் அறிய வேணடிய கத்தோலிக்க பெரியார்!


தனிநாயகம் அடிகளார் தமிழ்க் கலாச்சாரத்தினதும், பண்பாட்டினதும், புகழ்சிக்கும் திகழ்சிக்கும் பெயர் பெற்ற யாழ்ப்பாணத்தின் கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட கத்தோலிக்க தமிழ்ச் செம்மல் என்றால் மிகையில்லை உலகத் தமிழாராட்சியை நடாத்த அடிகோலிய ஒருவர்.


அத்துடன் தமிழ் உட்பட ஏறக்குறைய எட்டு மொழிகளைக் கற்றிருந்தார். மேலைத்தேய நாடுகளில் தமிழின் பெருமையையும், தொன்மையையும் பறைசாற்றிய பெருமை எமக்கெல்லாம் பெருமையே.


மேலும் தமிழின் சுவையையும்,மேன்மையையும் உலக அரங்கில் மணம்பரப்ப 1952 ஆம் ஆண்டு "Tamil culture" முத்திங்கள் இதழை அடிகளார் வெளியிடத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

All Souls mass, Earlsfield








மறைக்கல்வி
Earlsfield Mass Centre





யாழ். ஆயருடன் TCA
இராப்போசன ஒன்றுகூடலின் போது



பணியக நிகழ்வின் நிழல்கள்

Youth Challenge - Wallington Mass centre
















Taking care of Elderly by
Earlsfield and Wallington






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் இதயத்திலிருந்து...




மார்கழி மாத வேர்ச் சஞ்சிகையானது, எமது இளையோரின் கருத்துகளையும், சமூக, ஆன்மீகக் கருத்துகளையும், உள்வாங்கிப் புதிய வடிவம் பெற்றுள்ளது. அத்துடன் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறியது போல, திருநிலையினரை மட்டும் நம்பிக் காத்திருக்காமல், பொதுநிலையினர் முன் வந்து, இணைந்து பணியாற்ற வேண்டும். இளையோரின் பங்களிப்பு மூலம்தான் சமூக சீர்கேடுகளை திருத்தி அமைக்க முடியும், எனவே மேலும் இளையோர் இணைய எதிர்பார்க்கின்றேன்.

இச் சஞ்சிகையானது புதிய வடிவம் பெற உழைத்த அனைவருக்கும், சிறப்பாக வேர்களின் இளையோர் குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றியும் உரித்தாகுக.

– க.நிமலன்

## இயக்குநரின் இதயத்திலிருந்து...



அன்பான உறவுகள் ஒவ்வொருவரையும் இவ் இதழின் ஊடாக சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நத்தார் புதுவருட வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நிலையினராகிய நீங்கள் திருநிலையினரோடு கை கோர்த்து, எமது இளைய சந்ததியினரை வழிநடத்த ஒன்றாக, ஒருமித்து, ஒரே இறைவனின் பாதையில் அர்ப்பணிப்புடனும், அன்புடனும் அந்த ஆண்டவனின் அடியொற்றி ஆனந்தமாகப் பயணிக்க வாழ்த்தி நிற்கிறேன்.

இதுவரை காலமாக என்னுடன் தோளோடு தோள் நின்று இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தை வளர்த்த பிரித்தானியா வாழ் மக்கள் எல்லோருக்கும் எனது நன்றிகள். புதிதாக பொறுப்பை ஏற்கும் அருட்தந்தை எல்மோ ஜோசப் அவர்களை உங்கள் சார்பாக வரவேற்று, அவருக்கு இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

– அருட்பணி செ.செபநேசரத்தினம்

Southall Mass centre Preparing for "Oli Vizha" 2017



### Meet the Team - வேர்க்குழு இலண்டன்

இயக்குனர் - அருட்திரு. செபமாலை செபநேசரட்ணம், +44(0)7956460418

ஆசிரியர் - திரு. கபிரியேல்பிள்ளை நிமலன், +44(0)7980998336

உதவி ஆசிரியர்- திருமதி.மேரி திரேஸ்ராணி அருளானந்தம், +44(0)7818651154

**ஊடகத் தொடர்பாளர்கள்**

திரு. அமிர் லூயிஸ், திரு. விக்ரர் சிவகுணம், திருமதி. மேரி லக்ஸ்சனா பெர்ணாந்து




### Youth Design Helpers

Alex Kumar Rajanayagam, Tharshan Nicholas, Benjamin John Sebastian, Jerone Bastianpillai, Melvin Abishanth Arualanandam





Beach Trip by Earlsfield and Wallington Mass centre

### வேர் மரமாக உரமான உங்களையும் உள்ளத்தில் நன்றியுடன் நினைத்து...

எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எழுத்தாளர்கள், பெருந்தகைகள், ஆலோசகர்கள் அனைவருக்கும் நன்றி. இச் சஞ்சிகையை மேலும் தரமாக்குவதற்கு ஒத்துழைத்த மதிப்புக்குரிய ஆய்வாளர் எ.ஸ்.ஜே.பற்றிமாகரனுக்கும் மற்றும் சட்டன் தமிழ்ப் பாடசாலை அதிபரும் எழுத்தாளருமாகிய பாவை ஜெயபாலன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி. சிறப்பாக இச்சஞ்சிகையை சமூகமாகிய எம்மிடம் கையளித்த எமது அன்புக்கும், வணக்கத்துக்குமுரிய, பணியக இயக்குநர் செபமாலை செபநேசரட்ணத்தை நன்றியுடன் நினைக்கிறோம். வ் வேர்ச் சஞ்சிகையை ஆரம்பித்து வைத்த ஆரம்ப கர்த்தாவாகிய குருவானவர் றொசானையும் நன்றியுடன் நினைக்கிறோம். இவை அனைத்தையும் ஆக்கமாக்க, அருள்பாலித்த ஆண்டவனின் பாதங்களைப் பணிந்து, எல்லாப் புகழும் அவனுக்கே என நன்றியுடன் காணிக்கையாக்குகிறோம். - வேர்க்குழு இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Layout by A.Bastian, Printed by Net Printers - UK